நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 499/2024**

**P.W. 1 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கல்யாணி |
| தந்தை / கணவர் பெயர் | : | முருகன் |
| கிராமம் | : | ஆஸ்பத்திரி காலனி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 44 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 11–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணையின் தொடர்ச்சி** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–04.06PM )

1. நான் மா டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில் தொழில் நடத்தி வந்ததற்காக மத்திய அரசு சார்பில் சிறு தொழிலுக்காக வழங்கப்படும் உதயம் சான்றிதழின் இணையவழி நகலை சுய சான்றிட்டு தாக்கல் செய்கிறேன். மேற்படி

22.03.2018ம் தேதியிட்ட உதயம் சான்றிதழின் இணையவழி சுய சான்றிட்ட நகல் **பு.சா.ஆ 15 ஆக குறியிடு செய்யப்படுகிறது**. மேலும் எனது பெயரில் 2024ம் முதல் 2025ம் ஆண்டு வரையிலான நிதி ஆண்டிற்கான நான் தாக்கல் செய்த வருமான வரி கணக்கு அறிக்கையின் இணைய வழி சுய சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். ( **மேற்படி வருமானவரி கணக்கு அறிக்கை சுய சான்றிட்ட நகல் பு.சா.ஆ 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னை குறுக்கு விசாரணை செய்யும்போது சரியான வருமானவரி கணக்குகளை தாக்கல் செய்யவில்லை என்றும் பொய்யான வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும்குறுக்கு விசாரணை செய்யப்பட்டதால் மனு தாக்கல் செய்து அனுமதி பெற்று மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் என்னுடைய பெயரில் ஒரு நிறுவனம் தான் நடத்தி வருகிறேன். அதுபோக எந்த நிறுவனத்திலும் நான் பங்குதாரர் இல்லை. தனிப்பட்ட முறையில் நான் வேறு எந்த தொழிலும் செய்யவில்லை. என்னுடைய மாதாந்திர சராசரி வருமானம் என்னுடைய ஆடிட்டருக்கும் கணவருக்கும்தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ 16 வருமான வரி கணக்கு அறிக்கையில் என்னுடைய வருடாந்திர வருமானம் ரூபாய் 5, 69,000 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. பு.சா.ஆ 15ல் ஆவணத்தில் 19/88, மின்வாரிய அலுவலகம் எதிரில், மேட்டூர் டேம் என்று என்னுடைய நிறுவன முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் பு.சா. ஆ 7 வழக்கறிஞர் அறிவிப்பில் அதில் மேற்படி முகவரியை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய வீட்டு முகவரியை குறிப்பிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன்.

3. எதிரி எனக்கு கொடுக்கவேண்டியதாக சொல்லும் ரூபாய் 49, 50,000/- விவரம் குறித்து நான் தாக்கல் செய்துள்ள பு.சா.ஆ 16 வருமான வரி கணக்கு அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் தவறாக குறிப்பிடுகிறேன் என்றாலும் அவ்வாறு எந்த விவரமும் நான் தாக்கல் செய்த

வருமான வரி கணக்கு அறிக்கையில் இல்லை என்றாலும் சரியல்ல. இதுநாள் வரை எவ்வளவு வருமான வரி செலுத்தியுள்ளேன் என்று எனக்கு தெரியாது. எனது ஆடிட்டருக்குதான் தெரியும். நான் சொன்னவாறு எதிரி எந்தவித தொகையும் எனக்கு கொடுக்க வேண்டியது இல்லை என்றாலும், கிரய ஒப்பந்தம் செய்யும் போது நான் எதிரியிடம் இருந்து வாங்கி கொண்ட காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த பொய் வழக்கை தாக்கல் செய்கிறேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு எனக்கு கொடுக்க வேண்டி இருந்திருந்தால் அது பற்றி வருமான வரி கணக்கை குறிப்பிட்டு இருப்பேன் என்றாலும், மேற்படி 2024ம் வருடத்திற்கு முன்பாக கணக்கு காட்டி இருந்தால் அதற்காக வருமான வரி கணக்கை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:−04.32PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/−நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**